பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 08 திங்கட்கிழமை 25.10.2021 கதிர் 354

### இனி இது ரகசியம் அல்ல!

நமது நாட்டின் நிலைமை. அரசியல் தலைலை போன்றவை எந்த மட்டத்தில் உள்ளன என்பதை மனோ கணேசன் கோடி காட்டியிருக்கின்றமையை இன்றைய பத்திரிகையில் பார்க்க முடியும்.

இதேபோல எனது ☞2

## கம்யூனிஸ்ட் கட்சித் தவிசாளர் பதவி ராஜா கொலுரேவிடமிருந்து பறிப்பு!



ஊவா மாகாண ஆளுநர் ராஜா கொலுரே இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளர் பதவியிலிருந்து உடனடியாக நடைமுறைக்கு வரக்கூடியதாக விலக்கப்பட்டிருக்கின்றார் என்று கட்சியின் மத்தியகுழு அறிவித்திருக்கிறது. கட்சியின் இணைப் பாளர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். ☞10

# நாட்டின் நிலை அலங்கோலம்!

## ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதுவுமே தெரியாது என மனோ கணேசன் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25

"நாட்டின் நிலைமையோ அலங்கோலம். நாட்டில் என்ன நடக்கிறது என்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கூடத் தெரியாது."

– இவ்வாறு பெரும் விசனத்துடன் கூறுகிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன். ☞2



## ஆரம்பப் பிரிவுகள் இன்று ஆரம்பம் மாணவருக்கு சீருடை அவசியமல்ல

கொழும்பு,ஒக். 25

நாட்டின் அனைத்து அரசாங்க பாடசாலைகளினதும் ஆரம்பபிரிவுகளும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்நிலையில், மாணவர்கள் பாடசாலைக்கு சீருடையில் வருவது கட்டாயப்படுத்தப்பட ☞10



## மருதங்கேணியில் வெடிபொருள்கள் பெருமளவில் மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக். 25

வடமராட்சி கிழக்கு மருதங்கேணிப் பகுதியில் பெருமளவு வெடிபொருள்கள் புதைத்து வைத்திருந்த நிலையில் நேற்று மாலை மீட்கப்பட்டன.

காணி உரிமையாளர் ☞10


## அடிப்படைப் பொருளாதார அறிவும் கூட ராஜபக்ஷக்களின் அரசுக்குக் கிடையாது

### தொடர்ந்து போட்டுத் தாக்குகின்றார் மனோ எம்.பி.

கொழும்பு, ஒக். 25

விலைவாசித் துன்பத்தில் சிக்கி, விழி பிதுங்கும் நிலைமையில் நிற்கும் இந்நாட்டு மக்களிடம், அரிசி – பருப்பு விலைவாசிகளை பற்றி பேச நான் ஜனாதிபதி பதவிக்கு தெரிவு செய்யப்படவில்லை என்று கூறி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிரிப்புக் காட்டியுள்ளார். கி.மு 31 இல் பிறந்து, உலகை அளந்த, எங்கள் அய்யன் தெய்வப்புலவர் திருவள்ளுவர் சொல்லிச்சென்ற 'இடுக்கண் வருங்கால் நகுக' என்ற வாக்கியத்துக்கு இணங்க நாமும் சிரித்து வைப்போம் என தமிழ்முற்போக்குக்கூட்டணித்தலைவர் மனோ கணேசன் ☞2

## கிணற்றில் விஷ வாயு; இருவர் உயிரிழப்பு



குளியாப்பிட்டி, ஒக் 25

கிணறு ஒன்றைச் சுத்தம் செய்து கொண்டிருந்த இருவர் விஷ வாயு தாக்கியதில் உயிரிழந்துள்ளனர்.

குளியாப்பிட்டி, கந்தானே கெதர, கஹடபிட்டியவத்த பகுதியில் உள்ள ஒரு வீடொன்றில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இருவரில் ஒருவர் கிணற்றில் விழுந்துள்ள நிலையில், அவரை காப்பாற்ற மற்றொருவர் கிணற்றுக்குள் சென்ற போது அவரும் பின்னர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தள்ளிவிட்டால் விழும் நிலையில் அரசு எனச் சாடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஒக். 25

நாட்டின் தற்போதைய நிலையில் தள்ளிவிட்டால் விழும் நிலையில் அரசாங்கம் உள்ளதாகவும் நாட்டின் வரலாற்றில் மிகவும் பலவீனமான அரச தலைவராக கோட்டாபய ராஜபக்ஷ இடம்பிடித்துள்ளார் எனவும் ஐ.தே.கட்சி கடுமையான விமர்சனத்தை முன்வைத்துள்ளது.

ஐ. தே. க தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னபிரிய மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

பொருல்களின் விலை அதிகரித்துச் செல்வதால் ☞10



## 'டெல்டா பிளஸ்' புதிய திரிவு பரவும் ஆபத்து உள்ளதாம்



கொரோனா வைரஸின் புதிய திரிவான 'டெல்டா பிளஸ்' இலங்கையில் பரவுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என இலங்கை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பத்மா குணர்தன எச்சரித்துள்ளது.

புதியவைரஸ்திரிவாக டெல்டா பிளஸ் வைரஸ் இனங்காணப்பட்டுள்ளது. இந்த வைரஸ் மனிதர்களுக்கு எந்தளவான பாதிப்புக்களை ஏற்படுத்தும், ☞10

## புத்தாக்கக் கண்டுபிடிப்புப் போட்டியில் யாழ்.பல்கலை மாணவர்கள் முதலிடம்!




இலங்கைபொறியியல் கல்வி நிறுவகத்தினால், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி மாணவர் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட புத்தாக்க கண்டுபிடிப்பாளர் போட்டியில் யாழ். பல்கலைக்கழக மாணவர் அணி பிரபலமான கண்டுபிடிப்புக்கான முதலாம் பரிசைப் பெற்றுள்ளது .

மாணவர்களிடையேயான புத்தாக்க ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களுக் ☞10

## போர்க்கப்பல்கள் பல இலங்கைக்கு வருகை



பிரித்தானிய மற்றும் இந்திய கடற்படைகளுக்குச் சொந்தமான மூன்று போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கு வருகை தந்துள்ளன.

அதே சமயம் நான்கு ☞10

## இனி இது…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தென்னிலங்கை ஊடக நண்பருக்கு ஏற்பட்ட அனுபவத்தை இன்று விவரிக்கலாம் என நினைக்கின்றேன்.

கெரவலப்பிட்டிய யுகதனவி மின் நிலையத்தின் நாற்பது வீதப் பங்குகளை அமைச்சரவைக்குக் கூடப் போக்கு காட்டி விட்டு, அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு அரசு கைமாற்றியமை தொடர்பான விடயத்தில், அரசுக் கூட்டமைப்பின் – மொட்டுக் கட்சிக் கூட்டணியின் – பங்காளிக் கட்சிகள் கொதித்துப் போயிருக்கின்றமை தெரிந்ததுதான்.

பங்காளிக் கட்சிகளின் இந்த அதிருப்திக் குழுவில் அரசுக் கூட்டமைப்பின் இரண்டாவது பெரிய கட்சியான சு.கவும் முழுமையாக ஐக்கியப்பட்டு விட்டதாக உள்வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இதனை உறுதிப்படுத்துமாற் போல சு.கவின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும் மூத்த அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த, பலரையும் ஆச்சரியப்பட வைக்கும் விதத்தில் கடந்த வெள்ளிக்கிழமையன்று நாடாளுமன்றத்தில் அரசை ஒரு பிடிபிடித்து விளாசி, உரையாற்றியிருக்கின்றார்.

சு.கவின் மூத்த தலைவர்கள் ஆட்சித் தரப்புக்கு எதிராகக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு களமிறங்கத் தயாராகின்றனர் என்பதையே சுசில் பிரேமஜயந்தவின் பாய்ச்சல் பேச்சுக் காட்டுவதாக நாடாளுமன்றச் செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டார். சுசில் பிரேமஜயந்த சற்றுப் பொறுமைசாலி. நிதானமாகவே எப்போதும் பேசுபவர். அவரே சீறத் தொடங்கி விட்டார் என்றால் 'சாது மிரண்ட' நிலைமைதான். இனிக் காடு கொள்ளாமல் போகலாம்.

இனி, ஆளும் அரசுத் தலைமைக்கு எதிராக சு.கவிற்குள் வெளிப்படையாகப் பொங்கி எழாமல் இருப்பவர் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மட்டும்தான். அவரின் முறை விரைவில் வரக்கூடும்.

யுகதனவி மின் நிலையப் பங்கு மாற்ற விவகாரத்தை ஒட்டி நேரடியாகப் பேசுவதற்குத் தங்களுக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு ஆட்சிக் கூட்டின் பங்காளிக் கட்சிகள், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கோரியமையும் –

அதற்கு நேரம் ஒதுக்கித் தரமுடியாது, வேண்டுமானால் அரச நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் அதைப் பற்றிப் பேசுங்கள் என்று எடுத்தெறிந்து ஜனாதிபதி தரப்பில் பதிலளிக்கப்பட்டிருந்தமையும் – தெரிந்த விடயங்கள்தான்.

தங்களைப் புறமொதுக்கித் தூக்கி எறியும் விதத்தில் பேசிய ஜனாதிபதி கோட்டாபயவின் போக்குக் குறித்து அதிருப்தியும் விசனமும் கொண்டுள்ள அரசின் பங்காளிக் கட்சிகள், நேற்றுமுன்தினம் பங்காளிக் கட்சித் தலைவரான ரிரான் அலஸின் கொழும்பு அலுவலகத்தில் கூடித் தங்களுக்குள் மந்திராலோசனை நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதியுடனோ, அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலோ இனிமேல் இந்த விடயம் குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை, பயனுமில்லை, இனி விடயத்தை நேரடியாக மக்களிடம் எடுத்துச் செல்வதுதான் ஒரே வழி என்று பங்காளிக் கட்சிகள் அந்தக் கூட்டத்தில் தீர்மானித்தன என்ற தகவல் வெளியானது.

அதாவது, அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள், கோட்டாபய அரசின் எதேச்சாதிகாரத்தை – சர்வாதிகரத்தை – நட்டாமூட்டித்தனப் போக்கை – மைக் போட்டு மக்களிடம் எடுத்துரைக்கத் தயாராகின்றன என்பதுதான் இதன் உட்பொருள். அப்படி நடந்தால் சந்தோஷப்படலாம். ஆனால் நடக்குமா என்பதுதான் கேள்வி. நடந்தால் நல்லது.

இதற்கிடையில், நேற்று ஞாயிற்றுக் கிழமை அரச நாடாளுமன்றக் குழுவின் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் – அவரின் அழைப்பின் பேரில் – நடைபெறுகின்றது என்றும் –

அதில் விசேடமாக இரு தரப்பு கருத்து நிலை மோதல், வாக்குவாதம், தர்க்கம் எல்லாம் நடக்கும், காதைத் தீட்டி வைத்துக் காத்திருங்கள், செய்திகள் வரும் என்றெல்லாம் என் தென்பகுதி ஊடக நண்பர் ஒருவர் எனக்கு பீலா விட்டிருந்தார்.

அந்தச் சந்திப்பில் நடக்கும் குத்து வெட்டு விவகாரங்களை இன்று இப்பத்தியில் நான் உங்களுக்கு விருந்தாகப் படைக்கலாம் என்று நம்பிக் காத்திருந்தேன்.

நேற்று முன்னிரவு வரை என் நண்பரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரவில்லை. அந்த நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின் செய்திகளைத் திரட்டுவதில் மும்முரமாக இருப்பார், தகவல்களைத் திரட்டிய பின்னர் என்னுடன் தொடர்பு கொள்வார் என்று காத்திருந்தேன். நேற்றிரவு பத்து மணிவரை தகவல் ஏதுமில்லை. அதனால் நானே அழைப்பு எடுத்தேன்.

என் நண்பர் விசரின் – விசனத்தின் – எரிச்சலின் – உச்சத்தில் இருந்தார்.

"அங்கு ஒரு மண்ணாங்கட்டியும் நடக்கவில்லை. அது அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டம்தானாம். ஆனால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவர்கள் அனைவரையும் இரவு விருந்துடன் அந்தக் கூட்டத்துக்கு அழைத்திருந்தாராம். பத்துக் கட்சி பங்காளிகள் அணியின் எம்.பிக்கள் எண்ணிக்கை, மொட்டுக் கட்சி எம்.பிக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. அங்கு ஏதும் ஆர்ப்பாட்டம், அழிச்சாட்டியம், எதிர்ப்புப் காட்டும் நிலையிலோ, பிரதிபலிக்கும் எண்ணத்திலோ பங்காளிக் கட்சியினர் இல்லை. இரவு விருந்துடன் ஆட்டமும் நடக்கின்றது. நான் கடைசியாகத் தொலைபேசி அழைப்பு எடுத்தபோது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கேட்டுக் கொண்டமைக்கு அமைய, சு.கவின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜெயசேகர பாட்டு ஒன்று பாடுகின்றார். அந்தப் பாட்டுக்குப் பலர் ஆடுகின்றார். அதில் பங்காளிக் கட்சிகளின் அதிருப்திக்குழு எம்.பிக்களும் அடக்கம், இவர்களாவது, ராஜபக்ஷக்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுவதாவது" – என்று கடுப்பில் கூறினார் எனது ஊடக நண்பர்.

இதுதான் நாட்டின் இப்போதைய நிலைமை. மனோ கணேசன் எம்.பி. கூறிய அலங்கோல கட்டம் இதுதான் என்பது வாசகர்களுக்குப் புரியத் தொடங்கியிருக்கும் என்று நம்புகின்றேன்.

– மின்னல் –

## அடிப்படைப் பொருளா…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எம்.பி. கூறியுள்ளார்.

இந்த ராஜபக்ஷ அரசுக்கு அடிப்படை பொருளாதார அறிவு இல்லை. பொருளியல் விஞ்ஞான கேள்விகளுக்கான பதில்கள், அடித்துக் கேட்டாலும் இவர்களிடம் கிடைக்காது. தெரியாத வேலையை செய்ய போய் இப்போது இவர்கள் மூக்குடைந்து போய் இருக்கின்றனர் என்றும் அவர் கூறினார்.

அரிசி, பருப்பு, விலைவாசிகளை பற்றி பேசத் தான் பதவிக்கு வரவில்லை என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கூற்றுப் பற்றி மனோ எம்பி மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

கொவிட் முதல் அலையின் போது, முதன் முறையாக நாட்டு மக்களை விளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அன்று உரையாற்றினார். அந்த உரையில் அவர் கூறிய பிரதான விடயம் ஒன்று இருந்தது. அது என்ன?

சமன் மீன் டின், பருப்பு, பால்மா ஆகிய அத்தியாவசிய பொருள்களின் விலைகளைக் குறைப்பேன், அவற்றின் கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பான வர்த்தமானியை வெளியிடுவேன் என்று தனது உரையில் ஜனாதிபதி கூறினார்.

இதனால் எந்த பயனும் ஏற்படவில்லை என்பது வேறு விடயம். அவரது வர்த்தமானி விலைகளில் சந்தையில் பொருள்களைத் தேடியலைந்து மக்கள் ஏமாந்து போனமைதான் மிச்சம்.

சீனிக்கு ரூ. 49.75 என்ற மிகப்பெரிய வரிக் குறைப்பை இந்த ஜனாதிபதி செய்தார். வரி குறைந்தது. இதனால், சுமார் ரூ.1,595 கோடி வருமானத்தை திறைசேரி இழந்தது. ஆகா, அப்படியானால் இந்த பெரும்தொகை, பாமர மக்களுக்கு விலைக் குறைப்பாக கிடைக்கும், அதாவது சீனி அரசாங்கம் சொல்லும் குறைந்த விலையில் கிடைக்கும் என நாம் எதிர்பார்த்தோம். கடைசியில், இந்த ரூ.1,595 கோடி திறைசேரிக்கும் போகவில்லை. மக்களுக்கும் கிடைக்கவில்லை. எங்கே போனது? யாருக்கு கிடைத்தது? இதுபற்றி ஜனாதிபதி இதுவரை பதில் கூறவில்லை.

இதற்கிடையில் ஜனாதிபதி அரிசி, உணவு தானிய மொத்த வியாபார புறக்கோட்டை கடைவீதிக்கும் போய் அங்கே கடைகளில் சற்று நேரம் கணக்கு பிள்ளை வேலையும் பார்த்தார். பதுக்கப்படும் பொருள்களைத் தேடிக் கண்டு பிடிக்கிறேன் எனத் தனது இராணுவ அதிகாரி ஒருவரையும் நியமித்தார். அவரும் ஆலைகளைப் பிடிப்பேன், களஞ்சிய சாலைகளை உடைப்பேன், திறப்பேன் என்றார். ஒன்றும் பிரயோஜனம் இல்லை.

கடைசியில், அரிசி விலைகள் தொடர்பில், ஜனாதிபதியின் வர்த்தமானிகளைத் தூக்கிக் கடாசி விட்டு பாரிய ஆலை அதிபர்கள்தான் விலைகளைத் தீர்மானித்து அறிவித்தார்கள். இப்போது அந்த இராணுவ அதிகாரியும் காணாமல் போய் விட்டார்.

சந்தைப் பொருளாதார நாட்டில், பொருள்களின் விலைகளை, தேவை – விநியோகம் (Demand & Supply) ஆகியவைதான் தீர்மானிக்க முடியும். இரண்டும் சமபலத்தில் இருக்க வேண்டும். தேவை கூடி, விநியோகம் குறைந்தால் விலை கூடும். தேவை குறைந்து, விநியோகம் கூடினால் விலை குறையும்.

இந்த பொருளாதார அறிவு என்னிடம் உண்டு. எங்களிடம் உண்டு. இவர்களிடம் இல்லை. ஆகவே, இந்த இராணுவ அதிகாரிகள் தடாலடியாக விலைகளைத் தீர்மானிக்க முடியாது. அரசாங்கம், குறிப்பிட்ட பொருள்களின் இறக்குமதி, உள்நாட்டு உற்பத்தி ஆகியவற்றை அவதானித்து, வரி குறைப்பு, வரி விதிப்பு என்ற நிர்வாகத்தை மட்டுமே செய்ய வேண்டும்.

இராணுவ, சுங்க, வரி அரசாங்க அதிகாரிகளை கொண்டு, வர்த்தக சமூகத்தை மிரட்டி, காரியமாற்ற முடியாது. மிரட்டினால், 'போதுமடா சாமி' அல்லது 'போதுமடா ஆமி' என்று கூறிவிட்டு வர்த்தக சமூகம் கடைகளை மூடி விட்டு வீடுகளில் இருப்பார்கள். வேறு வழியில்லை. சும்மா முரண்டபட வேண்டாம். கொஞ்ச நாளைக்கு வீட்டில் இருங்கள் என என் நண்பர்களுக்கு நான் சொன்னேன்.

இந்த ராஜபக்ஷ அரசுக்கு அடிப்படை பொருளாதார அறிவு இல்லை. பொருளியல் விஞ்ஞான கேள்விகளுக்கான பதில்கள், அடித்துக் கேட்டாலும் இவர்களிடம் கிடைக்காது. தெரியாத வேலையை செய்ய போய் இப்போது இவர்கள் மூக்குடைந்து போய் இருக்கின்றனர். இன்று, வாழ்க்கை செலவு விலைவாசி வியம் கைமீறி போனவுடன் ஜனாதிபதி 'விலைவாசியைத் தீர்மானிக்க நான் இந்த பதவிக்கு வரவில்லை' – என மாற்றிப் போடுகிறார். ஆகவே இடுக்கண் வருங்கால் நகுக! – என்றார்.

## நாட்டின்…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தின் தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு தாம் வழங்கிய விசேட செவ்விநிகழ்ச்சியிலேயே மனோ கணேசன் இவ்விடயத்தை வேதனையோடு தெரிவித்தார்

"நாடு பெரும் இக்கட்டில் – நெருக்கடியில் – சிக்கி உள்ளது. அடுத்து என்ன நடக்கும்?" – என்று மனோ கணேசனிடம் கேட்கப்பட்டது.

"நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. அவருக்குக் கூட அடுத்து என்ன நடக்கும் என்பது தெரியாது என்பார். அதுதான் நாட்டின் நிலைமை.

"மிக அண்மையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நடந்தவற்றை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கெரவலப்பிட்டியில் உள்ள மின்வலு நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனம் ஒன்றுக்கு கைமாற்றும் ஒப்பந்தம் அரங்கேறியுள்ளது. அது குறித்து அரசின் பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியபோது, தமக்கு அது பற்றி தெரியாது, ஒன்றுமே தெரியாது என்று பதிலளித்திருக்கிறார் ஜனாதிபதி. அவ்வளவு கேவலமாக இருக்கிறது நாட்டின் நிலைமை, அரசின் நிலைமை. அத்தாட்சி பூர்வமாக நான் இந்தத் தகவலை உங்களுக்கு தருகிறேன்.

"அவர் (கோட்டாபய ராஜபக்ஷ) ஜனாதிபதியாகவும் செயற்படவில்லை, பிரதமராகவும் செயற்படவில்லை, அமைச்சரவையும் இங்கு இல்லை, அப்படித்தான் விடயங்கள் நடக்கின்றன. அத்துணை மட்டத்தில் அலங்கோலமான நிலைமையில் நாடு உள்ளது." – என்று விசனித்தார் மனோ கணேசன் எம்.பி.



# துப்பாக்கியுடன் ஒருவர் உடுப்புக்குளத்தில் கைது

முல்லைத்தீவு – உடுப்புக்குளம் பகுதியில் சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கியை விவசாய காணிக்கு கொண்டு சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக முல்லைத்தீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு – றெட்பானா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது. சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு பொலிஸார் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

Computer Certificate Courses *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.




# இயற்கை உரம் அடங்கிய சீனக் கப்பலை நாட்டுக்குள் அனுமதிக்கவே வேண்டாம்!

## ஜே.வி.பி. கோரிக்கை

இயற்கை உரம் அடங்கிய சீனக் கப்பலை நாட்டுக்குள் அனுமதிக்க வேண்டாம் என ஜே.வி.பி. கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கிங்டாவோ சீவின் பயோடெக் நிறுவனம் மற்றும் சீனத் தூதரகம் என்பன இலங்கை அரசாங்கம் மீது அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றன எனவும், இயற்கை உரத்தை பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றன எனவும் ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆய்வுகூட பரிசோதனைகளில் குறித்த உரம் நிராகரிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கப்பல் நாட்டுக்குள் பிரவேசிப்பதை இடைநிறுத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சர்ச்சைக்குரிய உரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் செயலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அரசாங்க அதிகாரிகளுக்கு குறித்த நிறுவனம் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் 23 ஆம் திகதி இந்தக் கப்பல் புறப்பட்டு விட்டதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

விவசாய ஆணையாளர் நாயகம் எடுத்த தீர்மானம் சரியானது எனவும், அரசாங்கம் இந்த தீர்மானத்தை மாற்றி இயற்கை உரத்தை பெற்றுக்கொள்ளக் கூடாது எனவும் அவர் கோரியுள்ளார்.

# இன்று முதல் ஆசிரியர், அதிபர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பார்கள்

## 2 மணிக்கு பின் நாடுதழுவிய போராட்டம் ஆசிரியர்கள் சேவைச் சங்கம் அறிவிப்பு

ஆசிரியர் – அதிபர்தொழிற்சங்க போராட்டத்தை முடக்கும் வகையில் எவ்விதமான திட்டங்களுமில்லாமல் பாடசாலைகள் திறக்கப்படுகின்றன. இன்று பாடசாலைக்கு சமுகமளிப்போம். கற்பித்தல் நடவடிக்கைகளை தவிர்த்து ஏனைய செயற்பாடுகளில் ஈடுபடமாட்டோம். – என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் – அதிபர்சங்கத்தின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்மேலும் குறிப்பிடுகையில் –

ஆசிரியர் – அதிபர் சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் வரை போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்பதில் உறுதியாகவுள்ளோம்.

சம்பளப் பிரச்சினைக்கு சுபோதினி குழு அறிக்கையை அடிப்படையாகக்கொண்டு தீர்வு வழங்கவேண்டும் என்பதைத் தொடர்ந்தும் வலியுறுத்துகிறோம்.

தொழிற்சங்கப் போராட்டத்தை முடக்கும் வகையில் அரசாங்கம் முறையான திட்டமில்லாமல் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து ஆரம்பப் பிரிவு பாடசாலைகளையும் இன்று முதல்திறக்கத் தீர்மானித்துள்ளது. மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோர் தயாராகவுள்ளார்களா என்பது தொடர்பில் கல்வி அமைச்சு ஆராயவில்லை.

சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் பாடசாலைகளில் முழுமைப்படுத்தப்படவில்லை. அத்துடன் மாகாணங்களுக் கிடையிலான பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ள நிலையில் மாகாணம் விட்டு மாகாணம் சென்று கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர் தொடர்பில் கல்வி அமைச்சு எவ்வித மாற்றுத் திட்டங்களையும் முன்வைக்கவில்லை.

இன்று முதல் ஆசிரியர், அதிபர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பார்கள். கற்பித்தல் செயற்பாடுகளில் மாத்திரம் ஈடுபடுவார்கள். பகல் 2 மணிக்கு பிறகு நாடு தழுவிய ரீதியில் போராட்டத்தில் பெற்றோரையும் இணைத்துக் கொண்டு ஈடுபடுவோம். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பாடசாலைக்கு சமுகமளிக்கப்போவதில்லை. – என்றார்.

# கொரோனா விழிப்புணர்வு புதுக்குடியிருப்பில் நடந்தது





முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தாய் தமிழ் பேரவையின் ஏற்பாட்டில் மக்களுக்கான கொவிட் விழிப்புணர்வு நடவடிக்கையின் தொடக்க நிகழ்வை புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்த் ஆரம்பித்து வைத்தார்.

நாட்டில் கொவிட் தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் தாய் தமிழ் பேரவையின் ஏற்பாட்டில் தொடக்க நிகழ்வு நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நாட்டில் கொவிட் தொற்றால் உயிரிழந்த மக்கள் நினைவாகச் சுடர் ஏற்றி மலர் தூவி வணக்கம்செலுத்தப்பட்டு கொவிட் விழிப்புணர்வு நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந்த், மாவட்ட செயலக கணக்காளர் கே.றெஜினோல்ட், புதுக்குடியிருப்பு பிரதேச ஆதார வைத்தியசாலை வைத்தியர் தயானந்தறூபன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் க.ஜெனமேஜெயந்த், வணிகர் சங்கத் தலைவர் நவநீதன், புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பிரதி பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாகக் கிராமங்கள் தோறும் மக்களுக்கான விழிப்புணர்வு துண்டுப்பிரசுரம் மற்றும் முகக்கவசம் என்பன வழங்கி வைக்கப்படவுள்ளதுடன், ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு கருத்தூட்டலும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சந்தி சரிக்கும் நீதிமுறைமை

இலங்கையின் நீதித்துறையில் இப்போது இடம்பெறும் சம்பவங்கள், நீதித்துறை சார்ந்தவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்ன்றன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

நாட்டின் நீதித்துறை வெளியே தெரியாத முறையில் – சத்தம் சந்தடியின்றி – சீரழிந்து கொண்டிருக்கின்றதா என்ற கேள்வி பலர் மத்தியிலும் எழுந்துள்ளது.

அதியுயர் நெருக்கடிகளுடன் சம்பந்தப்பட்ட பல வழக்குகள் – பிரமுகர்கள் பலர் தொடர்புடைய வழக்குகள் – நீதிமன்றங்களில் இருந்து விலக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றமைதான் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது.

'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்' – என்று பல தடவைகள் இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். நீதி, நீதியாக நிலைநாட்டப்படும் விடயத்தில் இந்து மூதுரை முக்கியமானது.

ஆனால், இலங்கை நீதித்துறையிலோ – சட்டத்துறைப் போக்கிலோ – இதற்கு மாறான, தலைகீழான செல்நெறியே வெளிப்படுவது மிகவும் துரதிஷ்டமான நிலைமையாகும்.

பல குற்றவியல் வழக்குகளில் பிரதான வழக்குத் தொடுநர் சட்டமா அதிபர்தான். நாட்டின் – அரசின் – சார்பில் வழக்குத் தொடுப்பவர் அவர்தான். இழைக்கப்பட்ட குற்றங்களைக் கணக்கில் எடுத்து, ஆதாரங்கள், சாட்சியங்களைப் பரிசீலிப்பது, வழக்குத் தொடுக்கும் தீர்மானத்தை அவரே எடுப்பார். அவரும் அவரது அணியினரும் எடுக்கும் தீர்மானங்களுக்கு அமைய குற்றம் சுமத்தப்படும் தரப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை – சட்ட முன்னெடுப்புகளை – சட்டமா அதிபரே வழிப்படுத்துவார்.

ஒருவருக்கு எதிராக வழக்குத் தொடுக்க முன்னர் – குற்றச்சாட்டுத் தீர்மானத்தை எடுக்க முன்னர் – சட்டமா அதிபர் திணைக்களம் அது தொடர்பான சாதக, பாதகங்களை விரிவாக – விவரமாக – விளக்கமாக – ஆராயும். ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் சட்டமா அதிபர் பெரும்பாலும் அதிலிருந்து பின்வாங்க மாட்டார். தமது கடமைகளை – பணியை – அவர் தீவிரமாகத் தொடர்வார். இதுதான் வழமை.

ஆனால் இப்போது நிலைமை தலைகீழாகியிருப்பதே, சட்டத்துறையில் ஆர்வம் கொண்டிருக்கும் தரப்புகள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இப்போது பிரதம நீதியரசராக இருப்பவர் ஜயந்த ஜயசூரிய. இதற்கு முன்னர் நாட்டின் சட்டமா அதிபராக இருந்தவர்.

நாட்டின் சட்டமா அதிபராக இருந்தபோது பொலிஸாராலும், புலனாய்வுப் பிரிவினராலும் தம் முன்னால் வைக்கப்பட்ட ஆதாரங்களையும் தகவல்களையும் ஆராய்ந்து பல சந்தேக நபர்களுக்கு எதிராக அவர் குற்றச்சாட்டுப் பத்திரங்களை முன்வைத்தார்.

இப்போது அவர் பிரதம நீதியரசர். தாம் சட்டமா அதிபராக இருந்து தொடுத்த வழக்குகளை அவர் இப்போது நேரடியாக பரிசீலிப்பதில்லை. விசாரிக்க முடியாது. அது சட்ட நியமமுறைக்கு அமையப் பின்பற்றும் நடைமுறை.

ஆனால், அவருக்கு பதவி உயர்வு என்பது போல சட்டமா அதிபர் பதவியிலிருந்து பிரதம நீதியரசராக மாற்றப்பட்டார்.

இப்போது தமிழர் ஒருவர் சட்டமா அதிபர். அவரை வைத்துக் கொண்டு உயர்மட்ட உணர்வுபூர்வ – வழக்குகள் பலவும் திடுதிப்பென விலக்கிக் கொள்ளப்படுகின்றன. முக்கிய பிரமுகர்களுக்கு எதிரான குற்றப்பத்திரங்கள் சட்டமா அதிபரினால் வாபஸ் பெறப்படுகின்றன.

கப்பம் அறவிடுவதற்காக பதினொரு அப்பாவித் தமிழ் இளைஞர்களைக் கடத்திப் பின்னர் காணாமலாக்கிய வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வஸந்த கரன்னகொடவுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பில் தற்போதைய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் பஸிலுக்கு எதிரான குற்றச்சாட்டு என்பவை எல்லாம் இந்த வரிசைக்குள் அடங்கும்.

தற்போதைய பிரதம நீதியரசர் முன்னர் சட்டமா அதிபராக இருந்த போது தொடுக்கப்பட்ட சுமார் இருபது முக்கிய வழக்குகளின் குற்றப்பத்திரங்கள் எல்லாம் வரிசையாக விலக்கப்படுகின்றன. மக்களுக்கு மட்டுமல்ல, பிரதம நீதியரசருக்கும் கூட அதைப் பார்த்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை. அதுதான் யதார்த்தம்.

## ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான கல்வி செயற்பாடுகள் இன்று ஆரம்பம்

### புலமைப் பரிசில், உயர்தரப் பரீட்சைகள் பிற்போடப்படக் கூடும் - கல்வி அமைச்சு

நாடளாவிய ரீதியிலுள்ள சகல ஆரம்ப பிரிவு பாடசாலைகளிலும், ஏனைய பாடசாலைகளிலுள்ள ஆரம்ப பிரிவுகளிலும் இன்று (திங்கட்கிழமை) முதல் கல்வி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளன எனக் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எம்.டி.தர்மசேன தெரிவித்தார்.

இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்ப பாடசாலைகளுக்கு கல்வி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஆரம்ப பிரிவுகளைக் கொண்ட பாடசாலை மாத்திரம் ஆரம்பிக்கப்படவுள்ளனவா அல்லது சகல பாடசாலைகளிலும் ஆரம்ப பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளனவா என்பது தொடர்பில் காணப்பட்ட தெளிவின்மைக்கு விளக்கமளிக்கும் போதே மேலதிக செயலாளர் எல்.எம்.டி.தர்மசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாட்டிலுள்ள சகல அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் முதலாம் வகுப்பு தொடக்கம் 5 ஆம் வகுப்பு வரையான மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாடுகள் இன்று (திங்கட்கிழமை) முதல் ஆரம்பமாகவுள்ளன. முதற்கட்டமாக 200 இற்கும் குறைவான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகள் கடந்த 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன.

அதற்கமைய இரண்டாம் கட்டத்தின் கீழ் 200 இற்கும் அதிகமான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளில் ஆரம்ப பிரிவிற்கான கற்பித்தலை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாடசாலைகளை ஆரம்பிப்பதற்காக மாகாண ஆளுநர்கள், மாகாண செயலாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்வி பணிப்பாளர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. - என்றார்.

நவம்பரில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஐந்தாம் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைகள் தொடர்பில் வினவிய போது பதிலளித்த அவர் -

இந்தத் தேசிய பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்குத் தொடர்ச்சியாக முறையாகக் கற்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கப்பெறவில்லை. எனவே, அவர்களின் பாடத்திட்டங்களை நிறைவு செய்ய வேண்டிய தேவையும் காணப்படுகிறது. எனவே, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் அன்றி இந்த பரீட்சைகள் பிற்போடப்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. - என்றார்.

## மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து முதலாம் திகதி மீளவும் ஆரம்பமென அறிவிப்பு




மாகாணங்களுக்கு இடையேயான பஸ் மற்றும் ரயில் சேவைகள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீண்டும் ஆரம்பிக்கும் என்று போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கண்டியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

50 வீதமான பயணிகள் பருவசீட்டை பயன்படுத்தி பயணிப்பதையும் சேர்த்து, பருவ சீட்டு வைத்திருப்பவர்களுக்கும் மாகாணங்களுக்குள் ரயில்களை இயக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தார்.

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவைகள் குறித்த திகதியில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பஸ் நடத்துநர்களும் பயணிகளும் அச்சமடையத் தேவையில்லை என தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்கு இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் பஸ்கள் தயார் நிலையில் இருக்கின்றமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், ஆசிரியர்கள் மற்றும் பிள்ளைகளின் தேவைக்கு ஏற்ப எவ்வித கட்டுப்பாடுகளும் இன்றி 'சிசு சரிய' பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்க உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

'சிசு சரிய' பஸ்களுக்கான செலவுகளை இலங்கை போக்குவரத்துச் சபையும், தனியார் பஸ்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவும் செலுத்துவதாக அவர் கூறினார்.

சம்பந்தப்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளருடன் கலந்துரையாடியதன் பின்னர் தேவைக்கேற்ப பஸ்களை இயக்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபைத் தலைவர்கள் மற்றும் மாகாண போக்குவரத்துப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பற்றாக்குறை உள்ள பகுதிகளில் பஸ்களை இயக்கத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, செலவுகளை அரசே ஏற்கும் என்றார். இதனிடையே, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் கட்டணத்தை திருத்தும் யோசனை எதுவும் இல்லை என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிக்கும் பட்சத்தில் டீசல் விலையை அதிகரிக்காமல் இருப்பதே சிறந்த வழி என அவர் தெரிவித்துள்ளார். எரிபொருள் விலை அதிகரிப்பு ஏற்படாது என தாம் நம்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னர் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்ட போது பஸ் கட்டணங்கள் திருத்தப்படாததால், எரிபொருள் விலையேற்றம் ஏற்பட்டால் பஸ் உரிமையாளர்களுக்கு மேலும் சுமை ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பிரபல திரைப்பட நடிகை மரணம்



*திரைப்பட மற்றும் நாடக நடிகையான விசாகா சிறிவர்தன காலமாகினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*புற்றுநோய் காரணமாக சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார் என்று கூறப்பட்டுள்ளது.*

*அவர் தனது 64 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் கைதிகளுக்கு நீதி கிடைக்கப்பெற்றாலே நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர்!

## அருட்தந்தை சத்திவேல் கருத்து



பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என்பதோடு அவர்களுக்கு நீதியும் கிட்ட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மட்டுமே நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

சிறைச்சாலைகள் முன்னாள் இராஜாங்க அமைச்சரான லொஹான் ரத்வத்தையின்கொலைஅச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்த அனுராதபுரம் சிறைச்சாலை அரசியல் கைதிகள் எட்டுபேரின் அடிப்படை உரிமை தொடர்பான வழக்கு கடந்த 21ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போது சட்ட மா அதிபர் சார்பாக முன்னின்று உதவி சொலிஸிட்டர் ஜெனரல் ரஜீவ் குணதிலக்க 'கைதிகள் தங்களை யாழ்ப்பாண சிறைக்கு மாற்றுமாறு கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது' என்றதோடு அதற்கு காரணம் 'அவர்கள் உறவினர்களின் உதவியை பெற்றுக் கொள்வார்கள்' என்பதாகும் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தக் கூற்று உண்மையெனில் இது நியாயத்தன்மை அற்றது மட்டுமல்ல அடிப்படை மனித உரிமை மீறும் மற்றும் அதனை அவமதிக்கும் செயலுமாகும் என்பதால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு கவலை அடைவதோடு இத்தகைய கூற்றுக்கள் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் தன்மை கொண்டவை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றது.

ஒருவரை நீதிமன்றம் குற்றவாளியாகத் தீர்ப்பிடும் வரை அவர் நிரபராதியே. அத்தோடு 'சிறைக் கைதிகளும் மனிதர்களே' எனும் மகுடவாசகம் சிறைச்சாலை சுவரிலே எழுதப்பட்டுள்ள நிலையில் சிறைக்கைதிகள் தமக்கான உதவிகளையும், சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்குத் தகுதி உடையவர்களே.

அதற்கு சட்டத்தில் இடமுண்டு. அத்தோடு ஒரு நீதிமன்றம் குற்றவாளியாகத் தீர்ப்பிட்ட ஒருவர் சட்ட உதவியோடு மேல் நீதிமன்றத்துக்கு மீண்டும் மனு செய்யும் உரிமையும் உள்ளது. இதனைத் தடுக்க எவராலும் முடியாது. அதுமட்டுமல்ல சிறையில் இருப்பவர்கள் உறவினர்களைப் பார்ப்பதற்கும் அவர்களோடு உறவை வளர்ப்பதற்கும் உதவிகளை பெறுவதற்கும் இதுவரை எவரும் தடை விதித்ததும் கிடையாது. இதனை எவராலும் தடுக்க முடியாது. தடுக்க நினைப்பது மனித உரிமை மீறலாகும்.

விசேடமாக அநுராதபுரம் சிறையில் உள்ள அரசியல் கைதிகள் பாதிக்கப்பட்டவர்கள். மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருப்பவர்கள். இவர்களை மனிதாபிமானம்கருதியும், பாதுகாப்புக்கருதியும் அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றுவதே சிறந்தது. அதை விடுத்து பெற்றோர், உறவினர் உள்ள இடத்துக்கு மாற்றினால் உதவிகளைப் பெற்று விடுவார்கள் என மறுப்பு தெரிவிக்கின்றமை மனித உரிமை மீறும் செயல் மட்டுமல்ல சிறைச்சாலை மகுட வாசகத்தையும் தூசிக்கும் செயலுமாகும்.

சிறைச்சாலைக் கைதிகள் பெற்றோரின் உதவிகளை பெற்றுவிடுவார்கள் என்றால் அனைத்துக் கைதிகளுக்கும் இது பொருந்த வேண்டும் அவ்வாறு சிறைக் கைதிகள் அத்தனைபேரையும் அவர்களின் உறவுகள் சந்திக்க முடியாது தூர இடங்களில் இருக்கும் சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கு சிறைச்சாலை திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா? குற்றம் புரிந்தவராகக் கருதப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான்ரத்வத்தை ஆட்சியாளர்களின் உதவியோடு வேறு ஒரு இராஜாங்க அமைச்சுப் பதவியை தக்கவைத்துக் கொண்டு சுதந்திரமாக நடமாடி திரிகின்றார். இது எந்தவகையில் நியாயம்? குற்றவாளிகள் குற்ற நீக்கம் செய்யப்படுவது குற்றங்கள் மீளப் பெற்றுக் கொள்வதும் ஏதோ ஒரு சக்தியின் உதவியால் என்பதை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உதவி சொலிஸிட்டர் ஜெனரல் உணர்வாரா? அரசியல் அதிகார துஷ்பிரயோகம் செய்வோரும், மனித உரிமை மீறுவோரும், அதனைத் தூசிப்போரும் கூட தண்டனையிலிருந்து தப்பி விடக்கூடாது. அதேவேளை பாதிக்கப்பட்ட அரசியல் கைதிகள் மன அழுத்தத்தில் இருந்து விடுபட அவர்கள் விரும்பும் சிறைச்சாலைக்கு மாற்றம் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும் என்பதோடு அவர்களுக்கு நீதியும் கிட்ட வேண்டும். அவ்வாறு நிகழ்ந்தால் மட்டுமே நீதித்துறை மீது மக்கள் நம்பிக்கை கொள்வர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# ராஜபக்ஷ அரசில் இருக்கும் பெரும்பாலானோர் திருடர்கள்

## அசோக அபேசிங்க எம்.பி. சாடல்



ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருக்கும் பெரும்பாலானவர்கள் திருடர்கள் என்பதை தான் பொறுப்புடன் கூறுகின்றேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசோக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் கூறியுள்ளார்.

கடந்த காலத்தில் உலக சந்தையில் எரிபொருளின் விலைகள் குறைந்தன. 10 டொலர், 5 டொலர் என விலை குறைந்ததுடன் இலவசமாக வழங்குகிறோம் எனக் கூறி அழைத்தனர்.

விலைகள் குறைந்துள்ளதால், உறுதியான எரிபொருள் விலையை ஏற்படுத்த நிதியத்தை ஏற்படுத்தி 2 ஆயிரம் கோடி ரூபாவை மீதப்படுத்தப் போகிறோம் எனக் கூறினர்.

அந்த பணம் எங்கே. பணமும் இல்லை ஒன்றும் இல்லை. இறுதியில் எரிபொருளின் விலைகளையும் குறைக்கவில்லை.

உலக சந்தையில் விலை அதிகரிக்கும் போது இலங்கையில் விலைகளை அதிகரிப்பதற்கு எதற்கு அரசாங்கம் என்று அப்போது கூறினர். நினைவில் இருக்கின்றதா?

தற்போது அதனைப் பற்றிய பேச்சுக்கள் எங்கே? உதய கம்மன்பிலவே அதனைக் கூறியிருந்தார்.

இவர்கள் கூறுகின்றமை அனைத்தும் பொய்.

நாட்டை முன்னேற்ற முதலில் திருடர்களை ஒழிக்க வேண்டும். திருடும் வரை இந்த நாட்டை முன்னேற்ற முடியாது.

நான் பொறுப்புடன் கூறுகிறேன். ராஜபக்ஷ அரசாங்கத்தில் இருக்கும் பெரும்பாலானவர்கள் திருடர்கள்.

கொள்ளையடிக்கும் அரசியல்வாதிகள். நேனோ நைட்ரஜனிலும் அண்மையில் 300 கோடி ரூபா கொள்ளையிட்டுள்ளனர். இது என்ன வேலை?

மக்கள் தினமும் பயன்படுத்தும் சீனியிலும் கொள்ளையிட்டனர்.

அரிசியிலும் கொள்ளையிட்டனர். தற்போது ஒரு லட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்துள்ளனர்.

இந்த தொகை எவ்வளவு காலத்துக்குப் போதுமானது? தினமும் 6 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி தேவைப்படுகிறது. இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி 15 நாள்களுக்கே போதுமானது.

இந்த அரிசி சேதனப் பசளையில் விளைவிக்கப்பட்ட அரிசியா? எனவும் அசோக அபேசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

# பி.சி.ஆர். பரிசோதனைகளை உடனடியாக நடத்த வேண்டும்

## இல்லையேல் சிக்கல் என்கிறார் உபுல் றோஹண

நாட்டுக்குள் கூடிய விரைவில் சீரற்ற வகையில் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை நடத்த வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார். கடந்த மூன்று தினங்களில் கொவிட் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதே அதற்குக் காரணம் எனவும் அவர் கூறியுள்ளார். இதனால், உடனடியாக சீரற்ற வகையில் ஆங்காங்கே பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளை நடத்தவில்லை என்றால், மீண்டும் சிக்கலான நிலைமை ஏற்படக் கூடும் எனவும் உபுல் றோஹண குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் பாதுகாப்பற்ற சிறுவர்களின் விவரங்களை சேகரிக்க புதிய நடைமுறை

இலங்கையில், முதல் தடவையாக துஷ்பிரயோகத்துக்கு உள்ளான மற்றும் பாதுகாப்பற்ற சிறுவர்களின் தரவுகளையும் உள்ளடக்கிய தேசிய தரவுத்தளமொன்று நிறுவப்பட்டுள்ளது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமையில் இந்தத் தரவுத்தளம் நிறுவப்பட்டுள்ளது.

இதற்கமைய பொலிஸார், கிராம உத்தியோகத்தர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள், அதிபர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் நேரடியாக இந்தத்தரவுத்தளத்தில் தகவல்களைப் பதிவேற்றம் செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகம், சித்திரவதை மற்றும் பாதுகாப்பற்ற நிலைகள் தொடர்பில், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு நாளாந்தம் 35 முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன எனவும், இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 7 ஆயிரத்து 221 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, சிறுவர்கள் முகங்கொடுக்கும் இன்னல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 24 மணிநேரமும் இயங்கும் 1929 என்ற இலக்கத்துக்கு அறியப்படுத்துமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுணதீவு பகுதியில் மண் ஏற்றல்; நபரொருவர் பொலிஸாரால் கைது

*மட்டக்களப்பு, மண்முனை மேற்கு பிரதேசத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவில் அனுமதிப்பத்திர நிபந்தனையினை மீறி மண் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் வாகனத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார் என வவுணதீவு பொலிஸார் தெரிவித்துள்ளனர். வவுணதீவு பொலிஸ் நிலையப்பதில் பொறுப்பதிகாரி ஜீ.எஸ்.பிரியங்கரவின் ஆலோசனைக்கமைவாக, விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின் போது கன்னங்குடா பகுதியில் வைத்து மேற்படி வாகனத்துடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*மண்ணுடன் கைப்பற்றப்பட்ட வாகனத்தையும்,கைது செய்யப்பட்ட நபரையும் சட்ட நடவடிக்கையின் பொருட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வவுணதீவு பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி ஜீ.எஸ். பிரியங்கர தெரிவித்துள்ளார்.*



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 171

**428.தமிழ் மக்கள் தமக்கு எதிரான அட்டூழியங்கள் இனப்படுகொலை எனக் காணப்படுவதற்காக அவற்றை சர்வதேச குற்றவியல் (ICC) நீதிமன்றுக்குப் பாரப்படுத்தப்படவேண்டுமென்று தானே வேண்டுகிறார்கள்?**

அவர்களது அரசியல் வளர்த்து நடத்தப்பட்ட காலங்களிலிருந்து தமிழரசிலிருந்து கருப்பெற்று, தனித்தமிழ் ஈழம் என வாலிப முறுக்கேறி, தமிழ் ஈழம் என வளர்ந்த சுமைகளால் பெற்ற அனுபவம் ஒரு நாட்டிற்குள் இரு தேசங்கள் (தமிழ் தேசம்) என்று பக்குவமடைந்து, இப்பொழுது முதுமையில் சம்பந்தன் பிரிக்கப்படாத, பிரிக்கக் கூடாத என்பது மட்டுமன்றி, பிரிக்கவும் விடக் கூடாத ஒரு நாட்டிற்குள் அதிகாரப் பரவலில் சேர்ந்து வாழவேண்டும் என்கிறார்.

வை • கேள்வி பதில் • கருத்துக்கணிப்பு • பார்வை • கேள்வி பதில் • கருத்துக்கணிப்
இன்னும் இருக்கிறதா
இந்திய–இலங்கை ஒப்பந்தம்?
ஈழத்தமிழர் இந்தியாவுக்கு
ஒருமித்த குரலில்
சொல்லவேண்டியது என்ன?
13 ஆம் திருத்தச்சட்டம்
இருந்தால் என்ன?
இறந்தால் என்ன?
40 நிமிட பார்வை / 40 நிமிட கேள்வி-பதில்
தமிழ்நெற் நிறுவக ஆசிரியர் திரு ஜெயா
TamilNet
ZOOM ID: 8138 325 7861 கடவுச்சொல் தேவையில்லை
24 ஒக்ரோபர் 2021 ஞாயிற்றுக்கிழமை
ஈழ, தமிழக நேரம்: மாலை 8:00 மணி (20:00)
மத்திய ஐரோப்பிய நேரம்: பிற்பகல் 4:30 மணி (16:30)
இலண்டன் நேரம்: பிற்பகல் 3:30 மணி (15:30)
ரொரன்ரோ நேரம்: காலை 10:30 மணி
கூட்டத்தின் போது
கருத்துக்கணிப்பும் இடம்பெறவுள்ளது!
ஒழுங்குகள்: TAMIL ADVOCACY FOR GENOCIDE JUSTICE

தமிழ் மக்களுக்காக தாங்கள் பேசத் தயார், ஆனால் அழைப்புத்தான் வரவில்லை எனத் தனது அறிக்கைகளால் தெரியப்படுத்துகின்றார்.

சிங்களப் பேரினவாதத்தை நாங்கள் சர்வதேசத்தின் உதவியோடு இராஜதந்திர வழிகளில் வெற்றிகொண்டு, தமிழ் மக்களின் உரிமைகளை, அபிலாஷைகளை நிறைவேற்றுவோம் என்று கூட்டமைப்பினரும் கூறி மக்களின் அங்கீகாரங்களைப் பெற்றார்கள்.

அப்படியானால் இன்று அந்த இராஜதந்திரங்கள் தோற்றுவிட்டனவா அல்லது இராஜதந்திரங்கள் பற்றி ஒன்றுமே அறியாமல், எல்லோரும் இழுத்த எடுப்புக்கு ஓடி ஆடி, அதையும் விட முடியாமல், இதையும் விட முடியாமல், ஆடும் வரை ஆடிவிட்டு கண்ணுறக்கம் கண்டு விட்டால் அது போதும் எனும் நினைப்புகளா?

இந்த இராஜதந்திரங்களின் ஒரு முனைப்பாக முன்னெடுக்கப்பட்டதுதான் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம். தமிழரசு, தமிழ் ஈழம் போன்று அது தமிழ் மக்களுக்கு போரின் முடிவு காலங்களிலிருந்து தாரக மந்திரமாகி விட்டது. தேர்தல் காலங்களின் வாக்குவேட்டைகளுக்கு சாதகம் என்பதால் அதுவே விதைக்கப்பட்டு, அப்படியான ஒரு தீர்மானத்தில் அரசியல் தீர்வு வரும் என தமிழ் மக்கள் வானத்தைப் பார்த்துக் கையேந்தி நிற்கக் கட்டுமானங்கள் அமைத்துள்ளார்கள்.

இவற்றுக்கு உந்து சக்திகளாக இருந்த பலர், முக்கியமாக புலம்பெயரிலிருந்தவர்கள், நாம் இந்த முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து கொண்டு செல்ல ஆவணங்களாக்கப்பட்டவை எல்லாம் அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லவேண்டும் என்று புத்தி சொல்லுகிறார்கள். வரலாறுகள் நிச்சயமாக ஆவணமாக்கிப் பாதுகாக்கப்படவேண்டும். அப்படியானால், அவர்கள் இருந்து, முன்னெடுத்து, நடத்திய இந்த தலைமுறையில் அல்லது கணக்கிட்டுச் சொல்லக் கூடிய ஆண்டுகளில் இப்படியொரு தீர்மானம் கைகூடி வராது என்ற விளக்கமா? புரியவில்லை. அல்லது காவடிகளின் இறக்கமா?

இனப்படுகொலை என்பது அரசியலிலிருந்து முளைத்தாலும் அனுபவப்பட்டதிலிருந்து, அறிந்ததிலிருந்து, பிரித்து சட்ட வரைவுகளுக்கு அமையத் தீர்மானிக்கப்படவேண்டியது. துருக்கியப் படைகளால், ஆர்மீனிய மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட அட்டூழியங்களும், கொலைகளும் இனப்படுகொலை என ஆர்மீனியர்கள் போராட்டம் நடத்தி, ஐ.நா. கூட பரிந்துரைகள் செய்தாலும் நூறு வருடங்களுக்குப் பிறகே அமெரிக்காவும் அதன் குழாம் நாடுகளும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளன. இடைக்காலங்களில் ஆர்மினியர்களும் உலகின் பல பாகங்களுக்கும் பரந்து ஆர்மீனியா பெயரளவில் சரித்திரத்தில் உண்டு. ஆகவே இருப்பு, தமிழ் மக்களது நிலங்களை, உடமைகளை, வாழ்வாதாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய அரசியல் தீர்வுகளை இனப்படுகொலை என்பதிலிருந்து பிரித்து, அவற்றையும் சமாந்தரமாக நகர்த்த வேண்டும். அரசியலை அரசியல்வாதிகளும், இனப்படுகொலை விவகாரத்தை தமிழ் மக்களின் புத்திஜீவிகளும் தகுந்த முறையில் மேற்கொண்டு கொண்டு செல்லவேண்டும்.

**429.இப்பொழுது தமிழ் மக்களின் நிலையில் அரசியல் தீர்வுக்கான அப்படியானதொரு வழி உண்டா?**

வருந்திக் கேட்டாலும் வலியுறுத்திக் கேட்டாலும் பதில் ஒன்றுதான். எங்கள் நிலையில் உண்டு. பாண்டிய மன்னன் தன் பட்டத்து அரசி கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடிய கள்வனை தன் முன்னே பிடித்துக் கொண்டு வருமாறு கூறியதில் 'பிடித்துக் கொண்டு வா'



என்றானா, அல்லது 'பிடித்துக் கொன்று வா' எனச் சொன்னானா என்பதில் பட்டிமன்றமே நடக்கிறது. அதைப்பற்றி என்னுடன் பேசிய போது எனது நண்பர் "இனி வருங் காலத்தில் விடுதலைக்குப் போராடிய புலம்பெயர் அமைப்புக்களெல்லாம் இப்படி 'பிரபாகரனை கொன்றது யார்? மஹிந்தவா?கோட்டாவா? கே.பியா? கருணாவா? டக்ளஸா? கூட்டமைப்பா? இந்தியாவா?' - என்றெல்லாம் பட்டிமன்றங்கள்தான் வைப்பார்கள். அவர்களுக்கு நேரம் போக வேண்டும். ஆனால் நாட்டில் மக்களுக்கு இறந்தாலும் எரிவதற்கு தமிழ்தேசத்துக்கு வெளியேதான் போக வேண்டிய வாழ்வாதாரக் கட்டமைப்புக்குள் வாழவேண்டி இருக்கிறது." - என்றார்.

தமிழ் மக்கள் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய ஒரே வழி ஒற்றுமையாக இல்லாவிட்டாலும், அதாவது தீர்வின் வழி என்ற ஓர் அம்சத்திலாவது ஓர் ஒத்த நிலைப்பாட்டு பாதையில் இந்தியாவின் ஆதரவைத் தேடி, அதனுடன் சேர்ந்து, பொது எதிரியான சிங்களப் பேரினவாதத்தை நோக்கிப் போவதுதான்.

சென்ற சில மாதங்களாக இதற்காகப் பல முயற்சிகளில் சர்வதேசத்தின் ஆர்வலர்கள் பலரோடு இணைந்து லண்டனில் இயங்கிய தமிழர் தகவல் நிலையம் (Tamil Information Center) இந்திய அரசுக்கு ஒரு சமர்ப்பணத்தை முன்வைக்க முயற்சி எடுத்தது. அதன் ஆக்கத் திற்குத்துணை தர, அரசியல் நிலைப்பாடுகளைத் தெரிவிக்க, நாட்டிலிருந்த பல கட்சித் தலைவர்கள் அதில் பங்குபற்றியிருந்தார்கள். நேரடியாகப் பங்குபற்ற முடியாதவர்களுடன் கூடத் தமிழர் தகவல் நிலையத்தில் அங்கத்தினர்களோ அல்லது தொடர்பாளர்களோ பேச்சுக்கள் நடத்தினர். அந்தச் சமர்ப்பணம் ஒரு பொது நிலைப் பாட்டை ஒட்டியதாக இந்திய அரசுக்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது. எல்லா அரசியல் கட்சித் தலைவர்களுக்கும் பங்கு பற்றியோருக்கும் அது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து என்ன முன்னேற்றங்கள் காணலாம் என்று பின்னால் பார்க்கலாம். நடக்கும் அரசியலைத் தெரியப்படுத்த அதைப்பற்றிக் குறிப்பிட்டேன். ஏனெனில் ரெலோ (TELO) தாங்கள் ஓர் ஒத்த நிலைப்பாடு எடுப்பதற்காகவும், இந்திய அரசை அந்த பொது நிலைப்பாட்டில் அணுகுவதற்காகவும், 2 நவம்பர் 2021 எல்லாக் கட்சிகளையும் சந்திப்புக்கு அழைத்திருப்பதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேசமயம் தமிழ் நெற் 'Tamil Net' ஜெயா 24, ஒக்ரோபர், 2021 "ஈழத் தமிழர் இந்தியாவுக்கு ஒருமித்த குரலில் சொல்லவேண்டியது என்ன?" என்ற தலைப்பின் ஊடகச் சந்திப்பை ஏற்படுத்தியுள்ளார்.

2009 இல் போருக்குப் பின் நடந்த புலம்பெயர் மாற்றங்களில் விடுதலைப் புலிகளிடையே பங்கு பற்றி பல கருத்துக்களை தன் பெயரிலும் புனையானவற்றிலும் எழுதிக் குவித்த சேரமான் 12 வருடங்களுக்குப் பின் தான் ''வல்லிமுனி''யாகி விட்டேனென்று பல ஞானோதய உபதேசங்கள் செய்து, அந்த முனியின் பணி நாடு கடந்த அரசின் உருத்திரகுமாரின் முகத்திரையைக் கிழிப்பது தான் என்று புறப்பட்டு, அந்த எடுப்பு பல முனைகளில் வெற்றிகரமாக முன்னேறுவதாக அறிவிப்புக்கள் நடைபெறுகின்றன.

நாட்டில் தமிழ் மக்களோ தங்கள் மானத்திற்காகவும் வாழ்வாதாரத்துக்கும் தங்களது கோவணங்களையாவது பாதுகாப்பதற்குப் பாடுபடுகிறார்கள். அந்த புள்ளியில் தமிழ் மக்களின் நாடும் புலம்பெயரும் சந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களது அரசியல், பழிவாங்கல்கள்தான் என்ற பாதையில் பயணிக்காது, பயன் தர வேண்டிய பாதையில் தடம்பதிக்க வேண்டும் என்பதற்காக இதனைத் தற்பொழுதுக்குச் சுருக்கமாகச் சுட்டிக் காட்டினேன்.

அப்படியான வளர்ச்சிக்கு மக்களின் நிரந்தர தீர்ப்பாயம் போன்ற அரசியல் சாரா அமைப்புக்கள் கணிசமான பங்கைச் செய்ய முடியும். இப்படியான முகநூல் பதிவுகளை அடக்கி அவர்களுடன் பணியாற்றலாம்.

(வளரும்)



# எரிபொருள் விலை உயர்ந்தால் முன்கூட்டியே நான் அறிவிப்பேன்

## அமைச்சர் கம்மன்பில தெரிவிப்பு



எரிபொருள்களுக்கான விலைகள் உயர்த்தப்பட்டால் முன்கூட்டியே அது தொடர்பில் அறிவிப்பேன் என எரிசக்தி வள அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்பதாக வெளியான தகவல் பிழையானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எரிபொருள் விலை உயர்த்தப்படுவதாக வெளியான வதந்தியைத் தொடர்ந்து பெரும் எண்ணிக்கையிலான வர்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்தனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 92 ஒக்ரேன் ரக பெற்றோலுக்கு தட்டுப்பாடு நிலவியது.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த வகை பெற்றோல் விற்பனை செய்யப்பட்டது. லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் ஒரு லீற்றர் 92 ஒக்ரேன் ரக பெற்றோலின் விலை 5 ரூபாவினால் உயர்த்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 2021 செப்ரெம்பரில் பணவீக்கம் வீழ்ச்சி!

## மத்திய வங்கி அறிக்கை

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றத்தால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம், 2021 ஒகஸ்டில் 6.7 சதவீதத்திலிருந்து 2021 செப்ரெம்பரில் 6.2 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்தது.

இந்த வீழ்ச்சிக்கு 2020 செப்ரெம்பரில் நிலவிய உயர் தள புள்ளிவிவரத் தாக்கம் முழுமையாகக் காரணமாக அமைந்தது.

அதேவேளை, உணவுப் பணவீக்கம், (ஆண்டுக்கு ஆண்டு) 2021 ஒகஸ்டில் 11.1 சதவீதத்திலிருந்து 2021 செப்ரெம்பரில் 10.0 சதவீதத்துக்கு வீழ்ச்சியடைந்த அதேவேளை உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு) 2021செப்ரெம்பரில் 3.0 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

ஆண்டுச் சராசரியின் அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண், 2021 செப்ரெம்பரில் 5.5 சதவீதமாக மாற்றமின்றிக் காணப்பட்டது.

# திரும்பப்பெற்ற வழக்குகளை மீண்டும் தொடர்கின்றது இலஞ்ச ஆணைக்குழு

லஞ்சம் மற்றும் விசாரணை ஆணைக்குழுவால் கடந்த காலத்தில் தொடரப்பட்டு, தொழிநுட்ப பிரச்சினை காரணமாகத் திரும்பப் பெறப்பட்ட 20 வழக்குகளில் 10 வழக்குகள் மீண்டும் தொடரப்பட்டுள்ளன என ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஏனைய வழக்குகளையும் மீண்டும் தொடர்வது தொடர்பாக ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு ஆராய்ந்து வருகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு, அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் பலருக்கு எதிராகத் தாக்கல் செய்திருந்த வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொண்டது.

ஆணைக்குழுவின் மூன்று ஆணையாளர்களின் கையெழுத்துக்களும் இல்லாமல் வழக்குகைத் தாக்கல் செய்யக்கூடாது என உயர் நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு அமைய அந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

# 16 இராணுவத்தினர் திடீர் சுகவீனத்தால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்

உணவு விஷமானதில் சுகவீனமுற்ற மட்டக்களப்பு வாகரை 233 படைப்பிரிவின் தலைமையக முகாமைச் சேர்ந்த 16 இராணுவத்தினர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 16 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உணவுக்கு பின்னர் புடிங் சிற்றுண்டியை உண்ட பின்னர் இவர்களுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து 16 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட எவரும் ஆபத்தான நிலைமையில் இல்லை என இராணுவத் தகவல்கள் கூறுகின்றன.

# தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 32 பேர் கைது

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரப் பகுதியில் 32 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக 2020 ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 81 ஆயிரத்து 288 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தின் எல்லைகளில் அமைக்கப்பட்டுள்ள 13 உள் நுழையும் மற்றும் வெளியேறும் சோதனைச் சாவடிகளில் சனிக்கிழமை மொத்தமாக 2 ஆயிரத்து 13 வாகனங்களில் பயணித்த 3 ஆயிரத்து 468 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவர்களில் உரிய காரணமின்றி மாகாண எல்லைகளைக் கடக்க முயன்ற 235 வாகனங்களில் பயணித்த 576 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

# யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொமர்ஷல் வங்கியால் உபகரணம்




யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தால் 24 லட்சம் ரூபா பெறுமதியான 2 நொன் இன்வாசிப் வெண்டிலேட்டர் என்பன கடந்த வெள்ளிக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் தவிசாளரும் முன்னாள் பிரதம நீதியரசருமாகிய ஸ்ரீபவன், கொமர்ஷல் வங்கியின் நிர்வாக இயக்குநரும் பிரதம நிறைவேற்று அதிகாரியும் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநரின் ஆலோசகருமாகிய லயன் எஸ்.ரெங்கநாதன், யாழ்ப்பாணம் கொமர்ஷல் வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் க.ராஜமனோகரன், கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தின் சார்பாக திருமதி கமலினி, சுன்னாகம் கொமர்ஷல் வங்கியின் கிளை முகாமையாளரும் மானிப்பாய் பரிஸ் லயன்ஸ் கழகத் தலைவருமாகிய லயன் ஆர்.கஜரூபன் ஆகியோர் இணைந்து யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியிடம் வழங்கிவைத்தனர்.

இந்த நிகழ்வில் லயன்ஸ் கழக ஆளுநர் சபை மாவட்ட பிரதி செயலாளர் லயன் ம.மயூரதன், ஆளுநர் சபை மாவட்ட பிரதி பொருளாளர் லயன் ஜெ.ரஜீவன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கொமர்ஷல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தால் கடந்த வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலை போன்றவற்றுக்கு ஒருகோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங் கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.போதனா பணிப்பாளரை சந்தித்தார் வடக்கு ஆளுநர்

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆகியவர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

பாதுகாப்பான சூழல், பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்கள், கொவிட் தொற்றை தடுக்கும் தொடர் நடவடிக்கைகள், சத்துணவு வழங்கல் மற்றும் பாடசாலைகளை மீள ஆரம்பித்தல் தொடர்பாக இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது குழு மோதல்கள், வன்முறைச் சம்பவங்கள் என்பன முற்றாக ஒழிக்கப்படும் என ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# உரத்தை வழங்குமாறு அரசை வலியுறுத்தி கொத்மலையில் விவசாயிகள் போராட்டம்



விவசாய நடவடிக்கைகளுக்கு தேவையான உரத்தை வழங்குமாறு வலியுறுத்தி கொத்மலை பகுதி விவசாயிகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொத்மலை வயல் பகுதியில் பதாதைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு இவ்வாறு போராட்டத்தில் கலந்துகொண்டனர். அகில இலங்கை விவசாய சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள், உரத் தட்டுப்பாட்டால் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை உள்ளக்குமுறல்களாக வெளிப்படுத்தினர்.

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரம் வழங்கப்படாததால் விளைச்சல் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் அனைவரும் விவசாயத்தை கைவிட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், அரசாங்கம் இந்த விடயத்தில் தனது பிடிவாத போக்கைக் கைவிட வேண்டும் என வலியுறுத்திய விவசாயிகள், உரத்துக்காக தேங்காய் உடைத்து இறைவனையும் வழிப்பட்டனர்.

# கொவிட்டிலிருந்து 298 பேர் சுகம்

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 298 பேர் குணமடைந்து நேற்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

அதனடிப்படையில் நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5 லட்சத்து 3 ஆயிரத்து 388 ஆக அதிகரித்துள்ளது.

# நாடாளுமன்று வரவுள்ள பசுவதைச் சட்டத்துக்கு அனைத்து எம்.பிக்களும் ஆதரவளிக்க வேண்டும்

## இந்துசமயப் பேரவை கோரிக்கை

நாட்டின் பொருளாதாரத்தின் அடிநாதமாகவும் இந்து, பௌத்தர்களின் புனித பிராணியாகவும் விளங்கும் மாடுகளைக் கொன்று உணவாக்குவதைத் தடைசெய்யும் சட்டம் நாடாளுமன்றத்துக்கு வரவுள்ளதை அனைவரும் அறிவர். இதனை இந்த நாட்டை நேசிக்கின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.

– இவ்வாறு கோரிக்கை முன்வைத்துள்ளது இந்து சமயப் பேரவை. இது தொடர்பாக அதன் யாழ்ப்பாணத் தலைவர் ஈசான சிவ.சக்திகிரிவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

எமது பெற்ற தாய்க்கு நிகராக விளங்கும் பசுக்கள் எமக்குப் பாலைத் தருகின்றன. அதிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் போன்றவற்றைத் தயாரித்துக் கொள்கிறோம்.

பசுவின் சாணி, சலம் மிகச்சிறந்த உரமாக உபயோகப்படுகிறது. வீட்டிற்கு ஐந்தாறு மாடுகளை வளர்த்து வந்த நாம் இன்று கிராமத்துக்கு ஐந்தாறு மாடுகளை வளர்க்குமளவிற்கு நிலை மாறிவிட்டது.

பயிர்களுக்கு மாட்டெரு, கூட்டெருவை பயன்படுத்தாததால் எமது மண், நீர், வளி என்பன மாசடைகின்றன. இதனால் பல்வேறு நோய்களுக்குள்ளாகின்றோம். குறிப்பாக சிறுநீரக நோய், புற்று நோய் போன்ற பலப்பல. இதனால் மக்கள் இறப்புவீதமும் அதிகரிக்கின்றது. மாட்டில் இருந்துபால், பாற்பொருள்களையும் பசளையையும் பெறுவதால் பொருளாதாரத்தில் நமது நாடுமேன்மையடையும். இந்துக்கள் தமது கிரியைகளுக்கான பஞ்சகவ்யங்களைப் பெறுவதற்கு மேலதிகமாக பௌத்தர்களும் இந்துக்களும் மாட்டை வழிபட்டும் வருகிறார்கள். பசுவில் முப்பத்துமுக்கோடி தேவர்கள் உறைந்திருக்கின்றனர் என சாஸ்திரங்கள் சொல்கின்றன. இதனால் நாளாந்தமும், விசேட தினங்களிலும் பூஜா வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஒரு பிராணிக்கென்று பொங்கல் திருவிழா நடைபெறுகிறதென்றால் அதுமாட்டுப் பொங்கல் மட்டுமே.

இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு நாடாளுமன்றத்துக்கு வரவுள்ள பசுவதைச் சட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏகோபித்த ஆதரவு வழங்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். – என்றுள்ளது.

# அரசாங்கத்திற்கு எதிராக இராகலையில் போராட்டம்!





அரசாங்கத்திற்கு எதிராக இராகலை நகரில் போராட்டமொன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) தமிழ் முற்போக்கு கூட்டணியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டது.

இராகலை – உடபுஸலாவ பிரதான வீதியில் போராட்டம் ஆரம்பமாகி ஊர்வலமாக இராகலை முருகன் ஆலயம் வரை சென்றடைந்தது.

அங்கு ஆலயத்துக்கு முன்பாக கூட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்துக்கு இராகலை வர்த்தகர்கள் கடைகளை மூடி ஆதரவு தெரிவித்தனர்.

இந்தப் போராட்டத்தில் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட தமிழ் முற்போக்கு கூட்டணியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.



## செல்வராசா கஜேந்திரனுக்கு கொரோனாத் தொற்று உறுதி!

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனுக்கு கொரோனாத் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனாப் பரிசோதனையின்போதே அவருக்கு தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இந்த வாரம் இடம்பெற்ற நாடாளுமன்ற கூட்டத் தொடரில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கையின் அடிப்படையில் காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கல்





காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகளில் வசிப்பவர்களுக்கு மாவட்ட காணி சீர்திருத்த அதிகார சபையின் பணிப்பாளர் திருமதி ரசிகாவின் முயற்சியாலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தவிசாளர் நிலந்த விஜயசிங்கவின் தலைமையில் 'காணி உறுதி வீட்டுக்கு' வழங்கப்படும் வேலைத்திட்டம் கடந்த சனிக்கிழமை புத்தளம் மாவட்டத்தின் வென்னப்புவ தொகுதியில் 'கிரிமெட்டியான செவ்வந்தி' மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இராஜாங்க அமைச்சரும் வென்னப்புவ தொகுதியின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அருந்திகா பர்ணாந்து. வடமேல் மாகாண முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டெவீன் பர்ணாந்து. வென்னப்புவ பிரதேச சபையின் உப தலைவர் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் 11 ஆவது நிர்வாக அதிகாரி பொறுப்பேற்பு

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பதினோராவது நிர்வாக அதிகாரியாக குமரேஷ் யந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் கடந்த 09ஆம் திகதி இறைபதமடைந்தார்.

அன்றைய தினம் தொடக்கம் குமரேஷ் யந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் கடமைகளை செய்து வந்தார்.

இந்த நிலையில், நேற்றுக் காலை குமரேஷ் யந்தன குமாரதாஸ் மாப்பாண முதலியார் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சென்று விசேட பூஜை வழிபாட்டில் கலந்து கொண்டார்.

பத்தாவது நிர்வாக அதிகாரியான குகஸ்ரீ குமாரதாஸ மாப்பாண முதலியார் 1964 டிசெம்பர் 15 முதல் கடந்த 09ஆம் திகதி இறைபதமடையும் வரை நிர்வாக அதிகாரியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குமாரதாஸ் மாப்பாணர் நினைவாக 92 பனம் விதைகள் நடப்பட்டன

நல்லூர் கந்தசுவாமி தேவஸ்தானத்தின் 10 ஆவது அதிகாரி குகஸ்ரீ இரகுநாத குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள் கடந்த 09.10.2021 அன்று தனது 92 ஆவது அகவையில் குகபதமடைந்தார். அன்னாரது ஞாபகார்த்தமாக 92 பனைமர விதைகள் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல் அமைப்பினால் செம்மணிவீதியும் நல்லூரன் செம்மணி வளைவும் சந்திக்கும் வீதியோரங்களில் நடப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன், நல்லூர் பிரதேச செயலகர் அ.எழிலரசி, யாழ்ப்பாண பிரதேச செயலர் சா.சுதர்சன், நல்லூர் பிரதேச சபை தவிசாளர் மயூரன் , கலைக்கூடல் அங்கத்தவர்கள், குகனேயர் குழாம் அங்கத்தவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.


படம்: ஐ.சிவசாந்தன்



# மெய்நிகர் வகுப்பறை

## Online Classroom 43

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




### 'கலப்பு கற்றல்' (Blended Learning) பயணம் ஆரம்பம்

கொவிட் - 19 தாக்கம் மேலும் நீண்டு செல்லும் சூழலில் பாடசாலை மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் பணிகள் தீவிரமடைந்திருக்கின்றன. பாடசாலை மீளத் திறக்கப்பட்டு வருகின்றது. இந்தச் சூழலில் மெய்நிகர் வகுப்பறைகள் எதிர்காலத்தில் குறைவடைந்து செல்லலாம் என்ற நம்பிக்கைகள் காணப்படுகின்றன. உண்மையில் எதிர்காலக்கல்வி என்பது நிகர்நிலை வகுப்பறைகளை மட்டும் கொண்ட ஒருமக கற்றலாக இருக்காது என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதிர்காலக்கற்றல் 'கலப்பு கற்றல்' என்பதை அடிப்படையாகக் கொண்டது. அதாவது நிகர்நிலை வகுப்பறைகளையும் மெய்நிகர் வகுப்பறைகளையும் உள்ளடக்கியதாகும்.

கொவிட் - 19 என்பது பல வகையான அன்றாட செயல்பாடுகளை மெய்நிகர் வெளிக்குள் நகர்த்தி தொலைதூர பகுதிக்குள் செலுத்துவதற்கு ஊக்கியாக இருந்தது. பாடசாலை போன்ற பல இன்றியமையாத செயல்பாடுகளின் 'புதிய இயல்பான' மாற்றம் நடைபெற்றிருக்கிறது. பாடசாலை அல்லது பல்கலைக்கழகம் முழுவதும் தொழில்நுட்ப மேம்படுத்தப்பட்ட கற்றலுக்கான நிலையான அணுகுமுறையை பின்பற்றுவது, கல்வி எதிர்கொள்ளும் அடுத்த சவால்களை எதிர்கொள்ள மிகவும் முக்கியமானதாகிறது. இதற்கு கலப்பு கற்றல் உதவும் எனலாம்.

ஒரு கலப்பு - கற்றல் பாடத்தில், எடுத்துக்காட்டாக, மாணவர்கள் பாரம்பரிய வகுப்பறை அமைப்பில் ஆசிரியரால் கற்பிக்கப்படும் வகுப்பில் கலந்து கொள்ளலாம், அதே நேரத்தில் வகுப்பறைக்கு வெளியே பாடத்தின் இணையவழிக் கூறுகளையும் அணுகலாம். இந்த விடயத்தில், வகுப்பில் உள்ள நேரம் இணைய வழி கற்றல் அனுபவங்களால் மாற்றப்படலாம், கூடுதலானதாக அமையலாம். மேலும் மாணவர்கள் வகுப்பில் செய்யும் அதே தலைப்புகளைப் பற்றி மெய்நிகர்வெளியிலும் கற்றுக்கொள்வார்கள். அதாவது, இணையவழி மற்றும் நேரில் கற்றல் அனுபவங்கள் ஒன்றுக்கொன்று துணையாகவும் வலுச்சேர்ப்பதாகவும் அமையலாம்.

இந்தக் கலப்பு - கற்றல் அனுபவங்கள் பாடசாலைகளுக்குப் பாடசாலை வேறுபடலாம். அதாவது மெய்நிகர் வகுப்பறை ஒரு பாடத்தின் ஒரு சிறிய அங்கமாக இருக்கலாம் அல்லது வீடியோ பதிவு செய்யப்பட்ட விரிவுரைகள், நேரலை வீடியோ மற்றும் உரை அரட்டைகள் மற்றும் டிஜிற்றல் முறையில் செயல்படுத்தப்பட்ட கற்றல் நடவடிக்கைகள் ஆசிரியருடன் மாணவர்களின் முதன்மையான அறிவுறுத்தல் தொடர்புகளாக இருக்கலாம். சில சந்தர்ப்பங்களில், மாணவர்கள் வீட்டில் அல்லது வேறு இடங்களில் மெய்நிகர் பாடங்கள், திட்டங்கள் மற்றும் பணிகளில் சுயாதீனமாக கற்றுக் கொள்ளலாம். ஆசிரியர்களின் சந்திப்பு அவர்களின் கற்றல் முன்னேற்றத்தை மறுபரிசீலனை செய்ய உதவுவதாக அமையலாம். தங்கள் வேலையைப் பற்றி விவாதிக்க, கேள்விகளைக் கேட்க அல்லது கடினமான கருத்துகளுக்கு உதவி பெறலாம். மாணவர்கள் தங்கள் முழு நாளையும் ஒரு பாரம்பரிய பாடசாலைக் கட்டடத்தில் செலவிடும் நிலைமை மாற்றமடையலாம். மாணவர்கள் ஒரு ஆசிரியரிடமிருந்து அறிவுறுத்தலைப் பெறுவதை விட மெய்நிகர் வெளியிலும் தங்கள் நேரத்தினை செலவிடுவார்கள்

கொவிட் காலத்தில், டிஜிற்றல் மற்றும் இணைய வழி கற்றல் விருப்பங்கள் மிகவும் பிரபலமாகி, பாடசாலைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன, இருப்பினும் பல பாடசாலைகள் போதுமான நிதி, தொழில்நுட்பங்கள் மற்றும் பல சிக்கலான காரணங்களுக்காக புதிய தொழில்நுட்பங்களை மெதுவாகவே அணுகுகின்றன. கல்வி நிறுவன மறுசீரமைப்பிற்கு நிறையத் தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இணையம் மற்றும் பெரும்பாலான டிஜிற்றல் கற்றல் தொழில்நுட்பங்கள் இன்னும் ஒப்பீட்டளவில் புதியதாக இருப்பதால், கலப்பு கற்றல் அணுகுமுறை கல்வியின் சிறந்த பெறு




பேற்றுக்கான உத்திகளாகக் காணலாம். அதாவது, கலப்பு கற்றலை இணைப்பதன் மூலம், பாடசாலைகளும் ஆசிரியர்களும் தங்கள் வழிகளை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். வரலாற்று ரீதியாக அணுகல் மற்றும் மாணவர்களுடன் தொடர்பு கொண்டது மாற்றத்துக்கு உள்ளாகும். மாணவர்கள் நேரிலும் இணையவழியிலும் கற்கத் தொடங்கினால், அது பாடசாலைகளின் பாரம்பரிய பாடசாலை அட்டவணையை மறுபரிசீலனை செய்ய வழிவகுக்கும். அத்தோடு, வழக்கமான பாடசாலை நாள்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கும். கலப்பு கற்றல் என்பது ஒரு பாடசாலையின் ஒரு பெரிய சீர்திருத்த முயற்சியின் ஒரு அங்கமாக எதிர்காலத்தில் அமையலாம்.

பொதுவாக, கலப்பு கற்றல் பல சாத்தியமான நன்மைகள் மற்றும் தீமைகளைக் கொண்டுள்ளது. அதாவது அவை கொடுக்கப்பட்ட கலப்பு - கற்றல் மாதிரியின் வடிவமைப்பு மற்றும் செயல்பாட்டின் தரத்தை அடிப்படையாகக் கொண்டது. கலப்பு கற்றல் மாணவர்களுக்கு மெய்நிகர் கற்றல் மற்றும் தனிப்பட்ட கற்றல் ஆகிய இரண்டின் நன்மைகளையும் தருகிறது எனலாம். உதாரணமாக, மாணவர்கள் சுயாதீனமாகவும் மெய்நிகர் வெளியில் தங்கள் சொந்த வேகத்தில் வேலை




செய்யலாம், ஆனால் ஒரு ஆசிரியரின் தனிப்பட்ட கவனிப்பு மற்றும் அத்தகைய கல்வியாளர் வழங்கும் அனைத்து உதவி, அறிவு மற்றும் ஆதாரங்களையும் அணுக முடியும். அதே நேரத்தில், ஆசிரியர்கள் ஒரு பாரம்பரிய வகுப்பறை அமைப்பைக் காட்டிலும் பாடங்களை கட்டமைக்கவும் மிகவும் நெகிழ்வாக அல்லது ஆக்கப்பூர்வமாகவும் கல்வியை வழங்க முடியும். கலப்பு கற்றலில் ஆசிரியருடன் மாணவர்கள் தொடர்பு கொள்வது போதாது என்ற விவாதமும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

ஆனால், கலப்புக் கற்றல், ஆசிரியர்கள் குறைந்த நேரத்தை முழு வகுப்புப் பாடங்களைக் கொடுக்கவும், மாணவர்களுடன் தனித்தனியாகவோ அல்லது சிறு குழுக்களாகவோ அதிக நேரத்தைச் சந்தித்து, குறிப்பிட்ட கருத்துகள், திறன்கள், கேள்விகள் அல்லது கற்றல் சிக்கல்களுக்கு உதவலாம். கலப்புக் கற்றல், பள்ளிகளுக்கு குறைந்த செலவில் அதிக திறன் கொண்ட மாணவர்களுக்குக் கற்பிக்க உதவுகிறது. கலப்பு கற்றல் அணுகுமுறை நவீன பணியிடங்களை மிகவும் நெருக்கமாக ஒத்திருப்பதால் அது மாணவர்களுக்கு எதிர்காலத்தில் பயனுள்ளதாக அமையும். இந்த விடயத்தில், மாணவர்கள் சுய ஒழுக்கம், சுய ஊக்கம் மற்றும் வயதுவந்த வாழ்க்கையில் அவர்களுக்குத் தேவைப்படும் நிறுவனப் பழக்கங்கள் போன்ற கற்றல் திறன்களைப் பெறமுடியும்.

கலப்பு கற்றல் நேருக்கு நேர் கற்பித்தல் மற்றும் இணையவழிக் கற்றல்களை ஒருங்கிணைக்கிறது. பாடநெறி உள்ளடக்கம், ஆசிரியர்களுக்கு உதவும் தொழில்நுட்ப கட்டமைப்பால் இது மேலும் வலுவடையுமென்று நம்பலாம். இது இரண்டு அணுகுமுறைகளின் இணைந்த பலத்தை உருவாக்குகிறது. நேருக்கு நேர் தொடர்புகளின் பயன்களுடன் மெய்நிகர் கற்றலின் நெகிழ்வுத்தன்மையையும் இணைத்து வழங்குகிறது.

கொவிட் நோய்த் தொற்று மன அழுத்தம் மற்றும் நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் சில பிரகாசமான புள்ளிகளை உருவாக்கியுள்ளது. அதாவது, புதிய மற்றும் வளர்ந்து வரும் வழிகளில் கற்பவர்களுக்கு ஆதரவளிக்கும் வாய்ப்புகளை இது உருவாக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, வயது வந்தோருக்கான திறன்களை மேம்படுத்துவதற்கும், மீள்திறன் பெறுவதற்கும் தற்போது தேவை அதிகரித்துள்ளது. கடந்த பதினான்கு மாதங்களில், பலர் வாழ்க்கைப் பாதையை மாற்ற முடிவு செய்துள்ளனர் அல்லது கட்டாயப்படுத்தப்பட்டனர், மேலும் அவ்வாறு செய்வதால் பாரம்பரியமாக இரண்டு அல்லது நான்கு ஆண்டு பட்டம் பெற வேண்டிய அவசியமில்லை. பலருக்கு, இத்தகைய திட்டங்கள் மிகவும் வளமானவை, நேரச் செலவு குறைகிறது.

அதாவது, வயது வந்தோருக்கான மாணவர்களுக்கு அவர்களின் தொழில் பாதைகளை மாற்றுவதற்குத் தேவையான வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான புதிய வழிகளை நாம் உருவாக்க வேண்டும், மேலும் அந்த வேலை இப்போது நாடு முழுவதும் உள்ள நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் நடக்கிறது. இந்த 'மாறுபட்ட புதிய அணுகுமுறைகள்' புதிய 'தொடர்ச்சியான கற்றலை' ஊக்குவிக்கிறது. எதிர்காலத்தில் கலப்பு கற்றல் ஒரு முக்கிய அங்கமாக இருக்கும் என்பது தெளிவாகிறது. இதற்கேற்றால் போல ஆசிரியர்கள் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் தொழில்நுட்பம் மற்றும் கருவிகளுடன் தம்மை சித்தப்படுத்த வேண்டியிருக்கும். இதில் முக்கியமானது பாடநெறி உள்ளடக்கத்தை சீராக்குவதாகும். ஏனென்றால் ஒரு கலப்பு பாடத்திட்டம் பல்வேறு வகையான கற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக புதிய முறைகளை உள்ளடக்கியதாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.

புதிய நாளாந்தம் வளர்ந்துவரும் தொழில்நுட்பங்களுடன் மாணவர்கள் தம்மை விரைவாக சித்தப்படுத்திக்கொள்கிறார்கள். அந்த மாணவர்களின் எதிர்பார்ப்பு, 'எமது ஆசிரியர்களும் தொழில்நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்த வேண்டும்' என்பதாக அமைகிறது. அதாவது, எளிமையாகச் சொன்னால், மாணவர்கள் தங்கள் ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தை அதிகளவு பரீட்சையப்படுத்தி பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள்.

ஆகவே புதிய சூழலில் கற்றல் செயல்முறை விரைவாக மாற்றமடையும் அந்த மாறுதல்களுக்கு ஏற்றதாக குறைந்த தொழில்நுட்ப அறிவுடைய கல்வியாளர்களுக்கான புதிய பயிற்சிகள் மற்றும் மேம்பாட்டிற்கு கல்விப்புலம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

(தொடரும்....)

# ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களுக்கு மட்டுமேதான் நாளை பாடசாலை

## ஏனையோருக்கு இல்லை என்கிறது தொழிற்சங்கம்
## புதிய வடிவில் போராட்டம் தொடரும் என அறிவிப்பு

**கொழும்பு, ஒக்ரோபர் 25**

**இன்றைய தினம் பாடசாலைகள் ஆரம்பமாகும் நிலையில் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் மட்டும்தான் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டும். ஏனைய ஆசிரியர்கள் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று அதிபர், ஆசிரியர் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.**

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆசிரியர்களும், அதிபர்களும் இன்று திங்கட்கிழமை பாடசாலைகளுக்குச் சமுகமளித்தாலும் பிற்பகலில் அனைத்துப் பாடசாலைகளுக்கு முன்பாகவும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர். அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஒரு பகுதியிலிருந்து பயணத்தடையைக் கடந்து ஆசிரியர்கள் பயணிக்க முடியாது. இதனால் பயணத்தடை நீக்கப்படும் வரையில் பயணத்தடையைத் தாண்டி ஆசிரியர்கள் எவரும் பயணிக்கவேண்டிய அவசியமில்லை.

இதேவேளை, நாளை நாடளாவிய ரீதியில் பாரிய ஆர்ப்பாட்டங்களுக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த ஆர்ப்பாட்டங்களில் அனைவரும் பங்குகொள்ளவேண்டும்.

இன்றிலிருந்து புதிய வடிவத்தில் எமது தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

அதன் அடிப்படையில் -

✦ ஆசிரியர் மற்றும் அதிபர்கள் கடமைகளுக்காக தங்களுடைய தனிப்பட்ட தொடர்பாடல் உபகரணங்களை பயன்படுத்துவதைத் தவிர்ப்பது.

✦ காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை மாத்திரம் அதிபர்கள் நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

✦ காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 மணி வரை மாத்திரமே மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பொறுப்புடையவராதல்.

✦ வசதிகள் வழங்கப்படும் வரையில் இணையவழிக் கற்பித்தலில் இருந்து விலகி இருத்தல்.

✦ ஆசிரியர் மற்றும் அதிபர்கள் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும், அரச விடுமுறை தினங்களிலும் கடமைகளில் ஈடுபடாதிருத்தல்.

✦ ஆசிரியர் மற்றும் அதிகாரிகள் வாரநாள்களில் காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை கற்பித்தல் நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபடல் (வெளி நிறுவனங்களில் இருந்து வரும் கடமைகள், பாடசாலைகளின வெவ்வேறு வேலைத்திட்டங்கள், அடையாள அட்டை தயாரித்தல், சுகாதாரப் பிரிவு நடவடிக்கை, வேலைத்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல், வலய மற்றும் கோட்ட காரியங்களுக்கு தகவல்களை வழங்குதல், தர ஆவணங்களை தயார் செய்தல், வருடாந்த மற்றும் ஐந்தாண்டு திட்டங்களை தயாரித்தல், பொருள்கள் மதிப்பாய்வு, பாடசாலை கல்விச் சுற்றுலா மற்றும் வேலைத் திட்டங்களுக்காக அழைத்துச் செல்லல், பாடசாலை அபிவிருத்திக்குழுக் கூட்டத்தை நடத்துதல் போன்ற எந்த நடவடிக்கையிலும் ஈடுபடுவதை தவிர்த்தல்)

-போன்ற விடயங்களை நடைமுறைப்படுத்துவோம்.

அரசாங்கத்துக்கு நாங்கள் தெரிவிப்பது என்னவென்றால், எங்கள் பிரச்சினைகளுக்கான தீர்வு ஒரே கட்டத்தில் எட்டப்படவேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும். - என்றும் தெரிவித்தனர்.

### தள்ளிவிட்டால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மக்களுக்குத் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு வாழ்க்கைச் செலவும் அதிகரித்திருக்கின்றது. அதனால் அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு எந்த வழியிலாவது நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும். அரசாங்கத்தின் அனைத்து வேலைத்திட்டங்களும் தோல்வியடைந்துள்ளன. அதனால் மக்களும் இந்த அரசாங்கத்தின் மீது விரக்தியடைந்திருக்கின்றனர்.

அரிசி ஆலை உரிமையாளர்களே அரிசி விலையைத் தீர்மானிப்பதற்கு அரசாங்கம் இடமளித்திருக்கின்றது. அதே போன்று பல்வேறு காரணங்களை தெரிவித்து இறக்குமதி செய்யப்படும் பால்மா விலை அதிகரிக்கப்பட்டதுடன் உள்நாட்டு பால்மா விலையும் அதற்கு நிகராக விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. உள்நாட்டு பால்மாவின் விலை அதிகரிக்கப்படவேண்டுமா எனக்கேட்கின்றோம்.

மேலும் எரிபொருள்களின் விலையை அதிகரிக்கவேண்டும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்திருக்கின்றார். உலகில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டத்தில் செல்வது இலங்கையில் மாத்திரமாகும். இலாபத்துடன் அதை இயக்க இவர்களுக்குத் தெரியாது. அதிகாரிகளின் ஊழல், மோசடியே இதற்கு காரணமாகும். எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்போவதில்லை என அரசாங்கம் தெரிவித்திருக்கின்றது. ஆனால் எரிபொருள்களுக்குத் தட்டுப்பாட்டை ஏற்படுத்திவிட்டு விலையை அரசு அதிகரிக்கும். இதுதான் இந்த அரசாங்கத்தின் விலைச் சூத்திரம்.

அத்துடன் மக்களின் வாழ்க்கைச் செலவு பாரியளவில் அதிகரித்திருக்கின்றது. ஆனால் அதற்கு நிகரான சம்பள அதிகரிப்பு இல்லை. வாழ்க்கைச் செலவுக்கமைய அரச, தனியார் ஊழியர்களுக்க சம்பள அதிகரிப்பு இடம்பெறுவதில்லை. அப்படியாயின் மக்கள் எவ்வாறு வாழ்வது? அதனால் வாழ்க்கைச்செலவை குறைப்பதற்கு அரசாங்கம் எந்த வழியிலாவது நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும். அவ்வாறு இல்லாமல் இதற்கு மாற்று வழி இல்லை. இன்று இளைஞர்கள் நாட்டில் வாழமுடியாது வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சிக்கின்றனர். இன்று ஒருவாரத்துக்கு 12ஆயிரம் முதல் 15ஆயிரம் வரையான கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன - என அவர் மேலும் தெரிவித்தார்.

### போர்க்கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியப் போர்க் கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்தில் தரித்துள்ளன என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

பிரித்தானியக் கடற்படைக்குச் சொந்தமான 'கென்ட்' என்ற போர் கப்பலே கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள் ளது.

133 மீற்றர் நீளமும், 16 மீற்றர் அகலமும் கொண்ட இக் கப்பல் பங்களாதேஷில் இருந்து கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்திய கடற்படைக்கு சொந்தமான 02 போர்க் கப்பல்கள் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளன. ரதுல் மற்றும் மாகர் என்ற இந்தக் கப்பல்கள், இலங்கைக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனஎனஇலங்கைக்கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடற்படைக் கூட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக 'சுஜாதா', 'டுதர்ஷினி', 'தரங்கிணி', 'விக்ரம்' ஆகிய இந்திய போர்க் கப்பல்கள் திருகோணமலை துறைமுகத்தில் தரித்துள்ளன என இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

### மருதங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் தனது நிலத்தை சீர் செய்த சமயம் சில வெடிபொருள்கள் தென்பட்டுள்ளன. உடனே நிலத்தின் உரிமையாளர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இந்தத் தகவலின் அடிப்படையில் விடயத்தைப் பொலிஸார் விசேட அதிரடிப் படையினரின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர். அதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற விசேட அதிரடிப்படையினர் இந்த வெடிபொருள்களை மீட்டுள் ளனர்.

இதில் ஆர்.பி.ஜி. வெடிகுண்டுகள் - 12, எறிகணைகள் - 20 ஆகியவற்றுடன் நூற்றுக் கணக்கான துப்பாக்கி ரவைகளும் மீட்கப்பட்டுள்ளன.

## சிவபூமி திருக்குறள் வளாகத்துக்கு இன்று மாவிட்டபுரத்தில் அடிக்கல்

மாவிட்டபுரம் சிவபூமி திருக்குறள் வளாகம் அடிக்கல் நாட்டு வைபவம் இன்று (திங்கட்கிழமை) காலை 10 மணிக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நடை பெறும்.

இலங்கைசிவபூமிஅறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்தப் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது. மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், அவுஸ்திரேலியாவில் வாழ்பவருமான வைத்திய நிபுணர் கமலாகரனின் பேருதவியில் இந்தப் பாரிய திருப்பணி நடைபெறவுள்ளது.

திருக்குறள் முழுவதும் காட்சிப்படுத்துவதுடன் திருக்குறள் ஆய்வு நூலகம் மற்றும் திருக்குறள் ஆய்வு அரங்கம், தியான நிலையம் எனப் பல விடயங்கள் மக்கள் பயன் பெறும் வகையில் அமைக்கப்படவுள்ளன. மாவை ஆதீனகர்த்தா அவர்களின் ஆசியுடன் அடிக்கல் நாட்டு வைபவம் இடம் பெறும்.

### ஆரம்பப் பிரிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வில்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

பாடசாலைக்குப் பொருத்தமான வேறு உடைகளை அணிந்து பாடசாலை வர முடியும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

### புத்தாக்கக் கண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கிடையில் இலங்கை பொறியியல் கல்வி நிறுவகம் The Institution of Engineers Sri Lanka (IESL) நடாத்திய இளமாணி மாணவர் புத்தாக்கப் போட்டியில் (Undergraduate Inventor of the Year:UIY ) யாழ்ப்பாண இலங்கை பொறியியல் கல்வி நிறுவகத்தின் யாழ்.பல்கலைக்கழக பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்ட உணவுக் கழிவுகளில் இருந்து லஞ்ச் சீற்றைப் பிரித்தெடுக்கும் பொறி (Lunch Sheet Separator from food waste) முதலாம் இடத்தைப் பெற்று பிரபலமான கண்டுபிடிப்புக்கான விருதுக்குரியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியின் வெற்றியாளர் தெரிவுக்கான நடுவர்களாக இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் அதிகாரிகள் பங்கு கொண்டிருந்தனர்.

### 'டெல்டா பிளஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எவ்வாறு இந்த வைரஸ் பரவும் என்பதுத் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனம் இதுவரையில் எதனையும் கூறவில்லை எனவும் அவர் கூறினார்.

கொரோனா வைரஸின் ஏனைய திரிவுகள் போல இந்த வைரஸும் நாட்டுக்குள் பரவுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கம்யூனிஸ்ட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்களுக்கு எதிராக, அவர்களை அச்சுறுத்தும் வகையில், அவர்கள் பணிக்குத் திரும்பாவிட்டால் அவர்களின் நவம்பர் மாத சம்பளம் வெட்டப்படும் என்று ஆளுநர் என்ற முறையில் ராஜா கொலுரே அறிவித்தல் விடுத்திருந்தார்.

அதனைப் பரிசீலனை செய்த கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு, ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு எதிராக அச்சுறுத்தல் கருத்து வெளியிடுபவர் கட்சியின் தலைவராக இருக்க முடியாது என்ற அடிப்படையில் இந்த முடிவை எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆனால் ஆளுநர் என்ற முறையில் தாம் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு தமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முடியாது என்று ராஜா கொலுரே தெரிவித்திருக்கிறார்.